# உத்திரட்டாதி நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ உத்திரட்டாதி சக்தி**

பரமானு குண நவாதீதம்,

சிதாகாசபாஸ்கரம்பரம போகம்.

**3. திருப்பாவைபாசுரம் – 18 உத்திரட்டாதி இயல்பு**

உந்து மதகளிற்றன் ஒடாத தோள்வலியன்

நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய்

கந்தம் கமழும் குழலீ கடைதிறவாய்

வந்தெங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்

பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்

பந்தார் விரலி உன் மைத்துனன் பேர்பாட

செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப

வந்து திறவாய் மகிழுந்தேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/KXv84z_eUWY**

**விளக்கம் :**

ஒன்றும் நீயே, ஒன்பதும் நீயே, ஓடாத தோள் வலியின் நீயே உலகம் பிறந்தது உனக்காகத்தான் என்கிற வகையில் பரம போகம் உனக்கே சொந்தமாக பூப்பந்தலாக காத்திருக்கும். பறவை இனங்களும் வாசனைத் திரவியங்களும், இயற்கை சூழலும், மகிழ்ச்சியை அளித்திட மகிழ்ந்தலோர் எம்பாவாய் அனைத்திலும், ஆன்மிகத்தை கலப்பவர் நீவீரோ? உங்கள்

அனுபவங்கள் உலகத்தில் உன்னதமானவை. எனவே அனைவரும் இதேபோல் சிறப்பாக சிறக்க வேண்டும் என்பதில் அக்கறையாக கட்டுப்பாடுகளை கண்டிப்புடன் சொல்லி, சொல்லி குத்திக்காட்டி சமரசமின்றி அறிவுரைகள் வழங்கி வருவீர். சிதாகாச பாஸ்கரம் முதல் குரல் கொடுப்பது கோழியே ஆகும். எனவே அங்கெங்கும் கோழி அழைத்தன காண் என்கிற பாசுர வார்த்தைகள் நம்முடைய அக சிந்தனையில் உள்ள சிதாகாச வெண்மையை புலப்படுகிறது. மாதவிப் பந்தல் என்று தவத்தின் மேன்மையை பந்தார் விரலி என்றும் செந்தாமரைக்கை வளையில் ஒலி என்றும் கணவன் மகிழ வழிவகை ஒன்பது நெறிப்படுத்தும் தம்பதி பாவம் உத்திரட்டாதிக்கு மட்டுமே. அதை போகமாய் பெற தம்பதிக்கு மட்டுமே சாத்தியமாகும். இந்த பரம ே பாகமும், மகிழ்ச்சியும் கண்ணனுடன் உள்ள கண்ணியவான்களுக்கு மட்டுமே!

பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர் பாட செந்தாமரைக் கையில் வந்து திறப்பாய் மகிழ்ச்சியின் மாளிகையை. அனுபவங்கள் பலவிதம். மாதவி பந்தல் மேல் பல்கால் குயிலினங்கள், அனைத்தும் அதீதமான, நவாதீதமான, ஒன்பது வகையான குணங்கள் கலந்து மாதவனை திருப்திபடுத்தும் மாதவியாக இருப்பதே உத்திரட்டாதி. நப்பினாய் நந்த கோபாலன் வழிவந்த கந்தம் கமழும் பரம போகத்தின் அதிபதியாவாள்.

நினது கடையில் அனுபவங்களுக்கே முதலிடம் வந்தெங்கும் கோழி அழைக்கும் பொழுதுகளே சிதாகாச பாஸ்கரமாக, சூரியோதயமாக சித்தி, புத்தி ப்ராவகமாக உலகத்திற்கு வெகுவாக பயன்படும்.

யானை பலம் கொண்ட, யானை அம்சம் கொண்ட விநாயகர் அம்சம் நீ. உனைக்கண்டு ஒன்பது கோள்களும் மண்டியிடும். ஏனென்றால் நீயே குண

நவாதீதம். அதாவது ஒன்பது கிரகங்களும் நீயே! நன்றாயினும், அன்றாயினும் ஒன்றை ஒன்பதாக்கும் அதீத அற்புதங்கள் உன்னால் மட்டுமே முடியும். ஓடாத தோள்வலியன் நீ. முன் வைத்த காலை பின் வைக்கமாட்டாய். எந்த சண்டைக்கும் போகமாட்டாய், வந்த சண்டையை ஒன்பது கூறுகளாக குறை கண்டு எதிரிகளை ஒழித்திடுவாய், புகுந்த இடத்தின் பெருமையை, அருமையை மகிழ்ச்சியை குறையாவண்ணம் எண்ணத்தாலும், சொல்லும், செயலாலும் நிறைவேற்றுவாய். உத்திரட்டாதியே வருக! உத்திரட்டாதியே அருள்க!

## 4. வேதத்தில் உத்திரட்டாதி ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

அஹிர் புத்நியாய வித்மஹே
ப்ரதிஷ்டாப நாய தீமஹி
நவா அதீத தீமஹி
உத்திரட்டாதி ப்ரசோதயாத்

நவகிரக நாயகி வேப்பிலையே
நவநீதம் நீயன்றி வேறில்லையே
பாஸ்கரம் உனது பாவனையே
ஆகாசம் நீ நமோ நமோ

மூவரும் போற்றும் முகிழ்நகையே
யாவரும் கேட்கும் உல்லாசமே
தேவரும் ஏங்கும் நவலோகமே
மாபெரும் அம்மா நமோ நமே

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. உத்திரட்டாதி கவிதை

புதுமை பெண்களடி பூமிக்கு கண்களடி
பொதுமை கண்களடி புரட்சிக்கு சன்னலடி
புதுமை விண்ணரசி பெருமை சேர்க்குமடி
சுடுமை கண்டமடி இடுமை மத்தியடி

நவா தீதம் நவீனமயம் நினக்கே சொந்தம்
நவ வாயில் எட்டும் ஒட்டும் நினக்கே புரியும்
நவ சக்தி சக்கரங்கள் நினக்கே அடங்கும்
நவ ஜோதி நிறதிரைகள் நினக்கே தெரியும்

சிதாகாச பாஸ்கரம் சித்தரின் பிரகாசம்
இதிகாச ஞானதவம் புத்தரின் விலாசம்
ஜீவகாச சம்மந்தம் உள்நாக்கின் சுவாசம்
பராகாச பம்மந்தம் உத்ரசஹஸ்ராரம்

இகபரபோகம் கற்கால முதல் தற்காலம் வரை
சுக குண பாகம் கற்பனைக்கெட்டா செலவு வரை
மக கெஜக மௌனம் கல்விக் கெட்டிய வாக்கு வரை
தக தக வென தெய்வீகம் கடமையில் திறமை வரை

முன் கோபம் இருந்தாலும் முன்னேற்றம் உண்டு
முன் வார்த்தை வந்தாலும் முடிவுரை உண்டு
முன் ஆற்றல் எழுந்தாலும் மனமாற்றம் உண்டு
முன் போதம் வழிந்தாலும் அனுபவம் உண்டு

குத்தி குத்தி காட்டினாலும் கட்டுப்பாடுண்டே !
புத்தி பட்டி வாட்டினாலும் பச்சாதாபமுண்டே !
கத்தி கத்தி கத்தரித்தாலும் சுறுசுறுப்புண்டே !
சித்தி சித்தி எழுவராயினும் இரகசிய முண்டே !

## 6. அபிராமி அந்தாதியில் உத்திரட்டாதி சக்தி

**யோக சித்தி பெற**

சிறக்கும் கமலத் திருவே! நின்சேவடி சென்னிவைக்கத்

துறக்கம் தரும், நின் துணைவரும் நீயும் துரியம் அற்ற

உறக்கம் தரவந்து உடம்போடு உயிர் உறவற்ற, அறிவு

மறக்கும் பொழுது, என்முன்னே வரல்வேண்டும் வருந்தியுமே.

**கணவன் மனைவி கருத்து வேற்றுமை நீங்க**

வருந்தா வகைஎன் மனத்தாமரையினில் வந்துபுதுந்து

இருந்தாள் பழைய இருப்பிடமாக இனிஎனக்குப்

பொருந்தாது ஒருபொருள் இல்லை; விண்மேவும் புலவருக்கு

விருந்தாக, வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே.

**அரசாங்கச் செயலில் வெற்றி பெற**

மெல்லிய நுண் இடைமின் அனையாளை, விரிசடையோன்

புல்லிய மென்முலை பொன் அனையாளைப் புகழ்ந்துமறை

சொல்லிய வண்ணம் தொழும்அடியாரைத் தொழுமவர்க்குப்

பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம்தருமே.

**மனநிலை பக்குவமடைய**

பதத்தே உருகி, நின்பாதத்திலே மனம் பற்றி, உன்தன்

இதத்தே ஒழுக அடிமைகொண்டாய்; இனியான் ஒருவர்

மதத்தே மதிமயங்கேன்; அவர் போன வழியும் செல்லேன்;

முதல்தேவர் மூவரும், யாவரும் போற்றும் முகிழ்நகையே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் உத்திரட்டாதி சக்தி ஓம்... ஓம்... ஓம்...

| | |
|---|---|
| ஓம் அநாதயே நம | – ரிஷிமூலம் போல் ஆதிமூலம் போல் காணமுடியாத மூலமே போற்றி |
| ஓம் புவோபுவே நம | – உலகை காக்கும் ஒன்பது கோள்களே போற்றி |
| ஓம் லக்ஷ்மியை நம | – மகாலட்சுமியாக போகம்பெறும் அம்சமே போற்றி |
| ஓம் ஸுவீராய நம | – நவ வேடங்களில் நவரசமே போற்றி |
| ஓம் ருசிராங்கதாய நம | – கவர்ச்சி மிகு அணிகலன்களே போற்றி |
| ஓம் ஜநநாய நம | – மக்கள் உபாசகரே போற்றி |
| ஓம் ஜநஜந்மாதயே நம | – மனிதம் வெல்ல மானுடம் உருவாக்குபவரே போற்றி |
| ஓம் பீமாய நம | – பயபக்தி நல்குபவரே போற்றி |
| ஓம் பீம – பராக்ரமாய நம | – பீம பராக்கிரமே போற்றி |
| ஓம் ஆதாரநிலயாய நம | – பஞ்ச பூத ஆதாரங்களே போற்றி |
| ஓம் அதாத்ரே நம | – சுய கால்களின் பலமே போற்றி |
| ஓம் புஷ்பஹாஸாய நம | – மொட்டும் மலரும் காலமே போற்றி |
| ஓம் ப்ரஜாகராய நம | – சர்வ ஜாக்கிரதை விழிப்பே போற்றி |
| ஓம் ஊர்த்வகாய நம | – எட்டையும் தாண்டிய நவமே போற்றி |
| ஓம் ஸத்பதாசாராய நம | – நல்லெண்ணங்களே போற்றி |
| ஓம் ப்ராணதாய நம | – தேர்வுவரின் முழு தேர்ச்சியே போற்றி |
| ஓம் ப்ரணவாய நம | – பிரணவத்தின் இயற்கையே போற்றி |
| ஓம் பணாய நம | – சித்தி தரும் உட்பிரகாசமே போற்றி |
| ஓம் ப்ரமாணாய நம | – தீவிர மனசாட்சி உருக்கமே போற்றி |
| ஓம் ப்ராணநிலயாய நம | – பிராண நிலையமெனும் பெருக்கமே போற்றி |
| ஓம் ப்ராணப்ருதே நம | – அன்னதானம் தரும் ஆனந்தமே போற்றி |
| ஓம் ப்ராணஜீவாய நம | – பிராண பலம் தரும் வாசியே போற்றி |
| ஓம் தத்வாய நம | – தத்துவ மயமான அழியாத சத்யமே போற்றி |
| ஓம் தத்வவிதே நம | – தன்பலமறிந்த மிகை கோணங்களே போற்றி |

| | |
|---|---|
| ஓம் ஏகாத்மநே நம | – ஏகாத்மாவில் உள்ள நவரசமே போற்றி |
| ஓம் ஜந்ம – ம்ருத்யு – ஜராதிகாய நம | – பிறப்பு, வளர்ப்பு, மாற்றம், மூப்பு, இறப்பு, நிலையறிவே போற்றி |
| ஓம் பூர்ப்புவ: ஸ்வஸ்தரவே நம | – வேதத்தின் வித்தான மூவுலக நீதியே போற்றி |
| ஓம் தாராய நம | – தாரா எனும் தோணியே போற்றி |
| ஓம் ஸவித்ரே நம | – உல்லாச உலகின் நிர்மாணமே போற்றி |
| ஓம் ப்ரபிதாமஹாய நம | – சம்சாரம் கடக்க சந்தோஷமே போற்றி |
| ஓம் யஜ்ஞாய நம | – உலகம் உறவை தேட சுவர்க்கமே போற்றி |
| ஓம் யஜ்ஞபதயே நம | – பிரம்மனின் படைப்பே போற்றி |
| ஓம் யஜ்வநே நம | – நவகோள் நவீனயாகமே போற்றி |
| ஓம் யஜ்ஞாங்காய நம | – யாகத்தின் யோக பிதாவே போற்றி |
| ஓம் யஜ்ஞவாஹநாய நம | – யாக சக்தியே போற்றி |

## 8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் உத்திரட்டாதி சக்தி

மஹேச்வரீமஹாகாளீமஹாக்ராஸாமஹாசநா
அபர்ணாசண்டிகாசண்டமுண்டாஸுர நிஷூதினீ

க்ஷராக்ஷராத்மிகா ஸர்வலோகேசீ விச்வதாரிணீ
த்ரிவர்க்கதாத்ரீ ஸுபகாத்ரியம்பகாத்ரிகுணாத்மிகா

ஸ்வர்க்காபவர்க்கதாசுத்தா ஜபாபுஷ்ப நிபாக்ருதி
ஓஜோவதீ த்யுதிதராயஜ்ஞரூபாப்ரியவ்ரதா

தூராராத்யாதுராதர்ஷாபாடலீ குஸுமப்ரியா
மஹதீ மேருநிலயாமந்தார குஸுமப்ரியா

வீராராத்கா விராட்ரூபா விரஜா விச்வதோமுகீ
ப்ரத்யக்ரூபாபராகாசாப்ராணதாப்ராண ரூபிணீ

மார்த்தாண்டபைரவாராத்யா மந்த்ரிணீ ந்யஸ்தராஜ்யதூ
த்ரிபுரேசீ ஜயத்ஸேனா நிஸ்த்ரைகுண்யாபராபரா

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் உத்திரட்டாதி சக்தி

ஸ்கந்தகுரு கவசபலன் பற்றறுத்துப் பரம் கொடுக்கும்

ஒருதரம் கவசமோதின் உள்ளழுக்குப் போகும்

இருதரம் ஏத்துவீரேல் எண்ணியதெலாம் கிட்டும்

மூன்றுதர மோதின் முன்னிற்பன் ஸ்கந்தகுரு

நான்குமுறை யோதி தினம் நல்லவரம் பெறுவீரே

ஐந்துமுறை தினமோதிப் பஞ்சாக்ஷரம் பெற்று

ஆறு முறையோதி ஆறுதலைப் பெற்றிடுவீர்

ஏழுமுறை தினமோதின் எல்லாம் கவசமாகும்

எட்டுமுறை ஏத்திடின் அட்டமா ஸித்தி கிட்டும்

ஒன்பது தரமோதிம் மரண பயமொழியும்

பத்துதர மோதி நித்தம் பற்றறுத்து வாழ்வீரே

கன்னிமார் ஓடையிலே நீராடி நீறுபூசி

ஸ்கந்தகுரு கவசமோதி ஸ்கந்தகிரி ஏறிவிட்டால்

முந்தை வினையெல்லாம் ஸ்கந்தன் அகற்றிவிடுவான்

நிந்தைகள் நீங்கிவிடும் நிஷ்டையுமே கைகூடும்

கன்னிமார் ஓடைநீரைக் கைகளிலே நீ எடுத்து

ஸ்கந்தனென்ற மந்திரத்தைக் கண்மூடி யுருவேற்றி

உச்சியிலும் தெளித்து உட்கொண்டு விட்டால்

சித்தமலம் அகன்று சித்த சுத்தியும் கொடுக்கும்

கன்னிமார் தேவிகளைக் கன்னிமார் ஓடையிலே

கண்டு வழிபட்டு ஸ்கந்தகிரி யேறிடுவீர்

ஸ்கந்தகிரியேறி ஞான ஸ்கந்தகுரு கவசமிதைப்

பாராயணம் செய்துலகில் பாக்யமெலாம் பெற்றிடுவீர்!!

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

## 10. கந்தர் அநுபூதி உத்திரட்டாதி சக்தி

கரவாகிய கல்வி உளார் கடை சென்று

இரவா வகை மெய்ப் பொருள் ஈகுவையோ?

குரவா, குமரா, குலிசாயுத, குஞ்

சரவா, சிவயோக தயாபரனே.(45)

எம் தாயும் எனக்கு அருள் தந்தையும் நீ

சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்

கந்தா, கதிர் வேலவனே, உமையாள்

மைந்தா, குமரா, மறை நாயகனே,(46)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

## 11. ராகங்களில் உத்திரட்டாதி சக்தி

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| மேஷ கல்யாணி | சித்ராம்பரி | சித்ராம்பரி | சுசரித்ரா |

## 12. மூலமந்திரம்

ஓம் சாயிஸ்வராய வித்மஹே

சத்யதேவாய தீமஹே

தன்னோ சர்வப்ரசோதயாத்

## 13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| வேம்பு | குல்மொஹர் | சேராங்கொட்டை | செம்மரம் |

## 14. பரிகாரம்

- ஜோடி மாடுகளுக்கு பழமும் தேனும் இனிப்பும் வழங்கிடவும். இரட்டை பழங்கள் கொடுத்தால் மிகவும் விசேஷம்.
- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.

- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு சகஸ்ரலட்சுமீஸ்வரர் திருக்கோயில்,** தீயத்தூர் - புதுக்கோட்டை


Aathma Trust **(ஆத்ம லிங்கம்)**

Regd No: 96/19

33.கோசாலை, கிரிவலம்,

திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org

www.yaasha.in

**Email :** jhohumm@gmail.com

**Youtube :** aathmanakshatra